DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No.57/2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | கெங்காராஜ் (சார்பு ஆய்வாளர்) (PW.7) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of June 2026

( 2வது எதிரி ஆஜர் இல்லை. 2வது எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை –**

1. நான் தற்போது திருநெல்வேலி சிறப்பு நுண்ணறிவு பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.07.2023ம் தேதியன்று 18.00மணிக்கு நான் திருச்சுழி காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது முருகையாபுரத்தைச் சேர்ந்த மங்கையன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று புகார்மனுவின் தன்மைகேற்ப மேற்படி நிலைய குற்ற எண்.145/2023 இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(1)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. பின்னர் அன்றையதினம் 19.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முத்திருளாண்டி, அழகுமுத்துராஜா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். (**அந்த மாதிரி வரைபடம் அசாஆ.6 ஆக குறியிடு செய்யப்படுகிறது**). வழக்கின் வாதி மங்கையன் மற்றும் சாட்சிகளான குமராண்டி, ஆதியன் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளான முத்திருளாண்டி, அழகுமுத்துராஜா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. அதன்பின்னர் வாதிக்கு சிகிச்சை அளித்த திருச்சுழி அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் வித்யா என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பின்னர் எனது விசாரணையில் சம்பவம் நடந்தது உண்மை என தெரியவந்ததால் எதிரிகள் மீது 01.08.2023ம் தேதியன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எ.த.கு.வி–**

1. புகார் அளிக்க புகார்தாரருடன் அவரது மகன்கள் யாரும் நிலையம் வந்ததாக ஆவண குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். புகார்தாரர் முதல் விசாரணையில் தனக்கு எழுதப்படிக்க தெரியாது என்று சொல்லியுள்ள நிலையில் புகார் காவல் நிலையத்தில் வந்தபின்பு எழுதப்பட்டதா அல்லது வரும்போதே எழுதிக் கொண்டு வந்தாரா என்றால் நிலையம் வரும்போதே எழுதிக் கொண்டு வந்தார். நிலையம் கொண்டு வந்த புகாரின் அடிப்படையில்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாகதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. புகார்தாரர் நீதிமன்ற சாட்சியத்தில் தனக்கு எழுதப்படிக்க தெரியாது என்பதால் காவல் நிலையத்தில் அவர் சொல்ல சொல்ல அங்கு

வைத்து எழுதப்பட்டது என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால் காவல் நிலையத்தில் வைத்து புகார் எழுதப்படவில்லை. புகார்தாரர் மங்கையனுக்கு சொந்த ஊர் முருகையாபுரம் இல்லை என்று எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. புகார்தாரரின் மனைவி ஊர்தான் முருகையாபுரம் என்றால் அவரது வீடு சம்பவ இடம் அருகே உள்ளது. இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள எதிரிகளின் ஊர் முருகையாபுரம் என்றால் சரிதான்.

3. 1வது எதிரி ஆண்டியின் மகன்கள் தான் 2 மற்றும் 3 எதிரிகள் என்றால் சரிதான். வாதிக்கும், எதிரிகளுக்கும் இடையில் ஏற்கனவே நில உரிமை தொடர்பாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். பார்வை மகஜர், மாதிரி வரைபடத்தில் உள்ள கையொப்பங்கள் தவிர அதில் உள்ள எழுத்துக்கள் என்னுடையதல்ல என்றால் சரியல்ல, நான்தான் எழுதினேன். மாதிரி வரைபடத்தில் வரிசை எண்.6ல் மங்கையன் காலியிடம் என்று குறிப்பிடப்பட்டுள்ள இடம் வாதியின் இடமா என்றால் ஆமாம். மங்கையனும், சாட்சிகளும் மேற்படி இடத்தை அவர்கள் சொந்த இடம் இல்லை என்று தெரிவித்துள்ள நிலையில் நான் மங்கையன் இடம் என்று குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல, பார்வை மகஜர் சாட்சிகள் சொன்னதின் அடிப்படையில் அவ்வாறு குறிப்பிட்டேன். பிரச்சனைக்குரிய இடம் யாருக்கு சொந்தமான இடம் என்று ஆவணங்கள் எதுவும் பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

4. நான் புலன் விசாரணை முறையாக செய்திருந்தால் பிரச்சனைக்குரிய இடம் யாருடையது என்று தெரியவந்திருக்கும் என்றாலும் பிரச்சனைக்குரிய எதிரிகளுக்கு சொந்தமான இடம் என்ற நிலையில் அதில் புகார்தாரர் தரப்பில் ஆக்கிரமிப்பு செய்யப்படுவதால் அதனை எதிரிகள் தரப்பில் தடுக்கும்போது புகார்தாரர் பொய்யான புகார்

அளித்துள்ளார் என்றாலும் சரியல்ல, நான் சிவில் பிரச்சனை தொடர்பாக விசாரிக்கவில்லை. புகார் கொடுத்த சம்பவத்தினை தான் விசாரித்தேன்.

5. மாதிரி வரைபடத்தில் வரிசை எண்.5ல் ராமன் வீடு என்று குறிப்பிடப்பட்டுள்ள இடம் இவ்வழக்கின் 3ம் எதிரியின் வீடு என்றால் சரிதான். அசாஆ4 விபத்து பதிவேட்டில் சம்பவத்தின்போது புகார்தாரரை 6 நபர்கள் மரக்கம்பால் அடித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் எதிரி ஆண்டிக்கு மொத்தம் 5 பிள்ளைகள் என்று எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். புகாரில் 1ம் எதிரி ஆண்டியும், அவரது மகன்களான 2, 3 எதிரிகள் என மொத்தம் 3 நபர்கள் அடித்ததாகதான் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் 6 நபர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது 1ம் எதிரியின் குடும்பத்தினர் அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற புகார்தாரரின் கெட்ட எண்ணத்தை காட்டுகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. எனது புலன் விசாரணையின் படி புகார்தாரர் மருத்துவரிடம் சொன்ன தகவல்கள் அனைத்தும் பொய்யானது என்றால் எனது விசாரணையில் 6 நபர்கள் அடித்ததாக தெரியவில்லை. புகார்தாரர் உள்நோயாளியாக சிகிச்சை எடுக்கவில்லை என்றால் சரிதான். புகார்தாரரின் குடும்பத்தினரை தவிர பொதுமக்கள் சாட்சிகள் யாரையும் சம்பவ சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ நடந்த பகுதி பொது மக்கள் அதிகம் உள்ள பகுதி என்றாலும் சம்பவம் உண்மையாக இருந்திருந்தால் சம்பவத்தை பார்த்த பொது மக்கள் சாட்சிகளாக இருந்திருப்பார்கள் என்றாலும் பொய் புகார் என்பதால்தான் புகார்தாரரின் குடும்பத்தார்களை மட்டும் சாட்சியாக விசாரணை செய்துள்ளோம் என்றால் சரியல்ல. புகார் சங்கதியின்படி மங்கையனை

எதிரிகள் தாக்கும்போது மங்கையன் குடும்பத்தார் யாரும் அருகே இல்லை என்றாலும் அதன்பிறகுதான் ஓடி வந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். எதிரிகளுக்கு சொந்தமான இடத்தினை மங்கையன் குடும்பத்தார் ஆக்கிரமிப்பு செய்வதை தடுத்ததால் இந்த பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு ஆக்கிரமிப்பை தடுக்கும்போதுதான் பொய்யாக புகார் கொடுத்து அலைக்கழிப்பு செய்கிறார்கள் என்றால் சரியல்ல. நாள் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் புகார் மனு பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சாட்சிகளை சரிவர விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,<br>
நீதித்துறை நடுவர்,<br>
திருச்சுழி.